# 11

# நித்திய வெகுமதி மற்றும் தண்டனை

"நித்தியம்," ஒருக்காலும் முடிவுராத இருப்புநிலை என்பது நமது சிந்தையினால் புரிந்துணர்ந்து கொள்வதற்கு மிகவும் கடினமான கருத்துக் களில் ஒன்றாக உள்ளது. நமது இயல்பான இந்த அண்டத்தில், நாம் கண்டு மற்றும் தொட்டு உணரக்கூடிய யாவையும் ஒரு தொடக்கத்தைக் கொண்டிருந்தன மற்றும் ஒரு முடிவைக் கொண்டிருக்கும்; ஆகையால், நித்தியம் பற்றிய கருத்தைக் குறித்து விடாப்பிடியாக சிந்தித்தல் என்பது நம்மை மூழ்கடிக்கச் செய்வதாக இருக்கக் கூடும். நித்தியம் என்பது நமது அனுபவத்திற்குப் புறம்பே இருப்பதால், அதைப் புரிந்துகொள்ளுதல் என்பது நமது சிந்தைக்கு ஏறக்குறைய இயலாததாகவே உள்ளது.

இந்தக் குறுகிய வாழ்வில் நாம் செய்பவை, நாம் நித்தியம் முழுவதும் இருப்பதற்கான உரிமையை ஈட்ட முடியாது என்று நாம் உணர்ந்தறிந்தா லும், தேவன் நமக்குப் பரலோகத்தை அதன் வியப்புக்களுடன் தருவார் என்பதில் கருத்து உடன்பாடு கொள்ள நாம் தயாராக இருக்கலாம். அதே வேளையில் நாம், இந்தக் குறுகிய வாழ்வில் செய்துள்ளவை, நமக்கு முடிவற்ற தண்டனையைத் தரப் பாத்திரமானவை என்கிற அளவுக்கு மோசமானவைகளாய் இருக்க முடியாது என்று நினைத்து, நரகத்தின் பயங்கரங்களை நாம் மறுத்துரைக்கலாம். நீதியற்றவர்கள் தேவனுடைய பழிவாங்குதலைப் பெறப் பாத்திரராய் இருப்பதைக்காட்டிலும், நீதிமான் கள் தேவனுடைய இரக்கம் மற்றும் தயவைப் பெற அதிகம் பாத்திரர்களாய் உள்ளனர் என்று நாம் நினைக்கலாம்.

## மனிதரின் கண்ணோட்டம்

இந்தப் பகுதி பற்றி மனிதரின் ஆர்வமும் புரிந்துகொள்ளுதலில் குறைபாடும், மரணத்திற்குப் பின்பு வரும் தண்டனை பற்றி நான்கு பிரதானக் கருத்துக்களுக்கு வழிநடத்தியுள்ளன:

முதலாவது, அண்டசராசரக் கொள்கைக்காரர்கள், தேவன் அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றின் தேவனாக இருப்பதால், அவர் கடைசியில் எல்லா மக்களுக்கும் அவர்கள் இந்த பூமியில் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிப் பொருட்படுத்தாது, பரலோகத்தில் நித்திய ஜீவனைக் கொடுப்பார் என்ற கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். சிலர், எந்த வகையான தண்டனையும் இருக்காது என்று நம்புகையில், மற்றவர்கள், சற்றுக்காலம்

தண்டனை இருக்கும் என்று நம்புகின்றனர். இந்த மாறுபாடுகள் இருப்பினும், அண்டசராசரக் கொள்கைக்காரர்கள், கடைசியில் எல்லாரும் பரலோகம் செல்வதாக நம்புகின்றனர்.

இரண்டாவது, நிர்மூலமாகுதல் என்பதில் நம்பிக்கை உடையவர்கள், கடைசி நியாயத்தீர்ப்புக்குப் பின்பு துன்மார்க்கர் இல்லாது ஒழிவார்கள் என்று நினைக்கின்றனர். (1) மரித்த துன்மார்க்கர் ஒருக்காலும் மீண்டும் எழுப்பப்பட மாட்டார்கள் மற்றும் உயிருடன் இருக்கும் துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள் என்று சிலர் நம்புகின்றனர். (2) எல்லாரும் உயிர்ப்பிக்கப்பட்ட பின்பு, உயிருடன் இருக்கும் மற்றும் மரித்திருந்த துன்மார்க்கர் யாவரும் அழிக்கப்படுவார்கள் என்று சிலர் நினைக்கின்றனர். (3) மற்றவர்கள், மரித்துப்போன துன்மார்க்கர் யாவரும் உயிர்ப்பிக்கப்பட்டு, சத்தியத்தைக் கற்பதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படும் என்று நம்புகின்றனர். பின்பு அவர்களிலும் மற்ற உயிரோடிருப்பவர்களிலும் சத்தியத்தைப் புறக்கணிப்பவர்கள் அழிக்கப்படுவார்கள் [என்று இவர்கள் நம்புகின்றனர்]. (4) இன்னும் மற்றவர்கள், சத்தியத்தை அறிய வாய்ப்பின்றி இறந்துபோன துன்மார்க்கர் மாத்திரம் உயிர்ப்பிக்கப்பட்டு, அந்த வாய்ப்பைப் பெறுவார்கள் என்று நம்புகின்றனர். அவர்கள் சத்தியத்தைப் புறக்கணித்தால் அவர்கள், சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாது உயிர் வாழ்ந்திருக்கும் மற்றவர்களுடன் அழிக்கப்படுவார்கள்.

மூன்றாவது, சத்தியத்தை மறுப்பவர்களுக்கு முடிவற்ற தண்டனை கிடைக்கும் என்பதைப் பலர் நம்புகின்றனர். சிலர், ஒரு நேரடியான, இயல்பான அக்கினியானது துன்மார்க்கரை என்றென்றைக்குமாக வேதனை செய்யும் என்று நினைக்கையில், மற்றவர்கள் அக்கினி என்பது துன்மார்க்கர் சகிக்க வேண்டிய வேதனையின் வகையை விவரிப்பதற்குப் பயன்படுத்தப் பட்ட உருவகம் என்று நினைக்கின்றனர். சிலர், தண்டனையின் அளவு என்பது ஒருவருடைய பாவத்தின் தீவிரத்தன்மையின் அடிப்படையில் இருக்கும், சத்தியத்தை அறிய வாய்ப்புக் கிடைக்கப் பெறாதவர்களுக்கு பெருமளவில் சலுகை கொடுக்கப்படும் என்று யூகிக்கின்றனர்.

நான்காவது, கிருபையின் நிலையில் இருந்தும், தங்கள் பாவங்களுக்குப் போதிய அளவு தண்டனை பெறாது மரித்தவர்கள் உத்தரிப்பு ஸ்தலம் என்ற இடத்திலிருந்து விடுதலையாகிப் பரலோகம் செல்லுவதற்கு முன்பு அவ்விடத்தில் தங்கள் பாவங்களுக்குத் தண்டனையாக குறிப்பிட்ட அளவுக்கு உபத்திரவம் அனுபவிப்பார்கள் என்று சிலர் நம்புகின்றனர். உத்தரிப்பு ஸ்தலத்தில் அவர்கள் இருக்க வேண்டிய கால அளவு என்பது அவர்கள் பூமியில் வாழ்ந்த வாழ்வின் தன்மையைப் பொறுத்திருக்கும் மற்றும் திருப்பலிகள், ஜெபங்கள், நற்செயல்கள் மற்றும் தங்கள் சார்பில் பிறர் வேதனைப்படுதல் ஆகியவற்றினால் அவர்கள் பிறரிடமிருந்து உதவி பெற முடியும் என்றும் இவர்கள் நம்புகின்றனர்.

சிலர், நித்திய தண்டனை என்பதைத் தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றுடன் இசைவிக்க முடியாது என்று முடிவு செய்கின்றனர். ஆகையால் அவர்கள், தேவன் அன்பும், இரக்கமும், சகிப்புத் தன்மையும் உள்ளவர் என்ற கருத்துக்குச் சீர்பொருந்திய தன்மையில்

*இருக்கும்படி (1 தீமோ. 1:2; 1 யோவா. 4:8) வேதாகமத்திற்கு விளக்கம் தர நாடுகின்றனர். அவர்கள் தேவனுடைய மறுபுறத்தைக் காணாமல் விட்டு விடுகின்றனர்: அவர் கோபம் மற்றும் பழிவாங்குதல் ஆகியவற்றின் தேவனாகவும் இருக்கின்றார்.[1] அவர் அக்கிரமத்தை வெறுக்கின்றார் (எபி. 1:9), "கண்டிப்பைக்" காண்பிக்கின்றார் (ரோமர் 11:22), மற்றும் "பட்சிக்கிற அக்கினியாய்" இருக்கின்றார் (எபி. 12:29). நாம், "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார், விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார், அந்தத் தயவிலே நிலைத்திருப் பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும், நிலைத்திராவிட்டால், நீயும் வெட்டுண்டுபோவாய்" என்று வாசிக்கின்றோம் (ரோமர் 11:22). எபிரெயர் 10:31, "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமா யிருக்குமே" என்று கூறுகிறது.*

*தேவன் தயவும் கண்டிப்பும் உடையவராயும் இருக்கின்றார். அவர் தமக்குக் கீழ்ப்படிகின்றவர்களைத் தயவுடன் நடத்துகின்றார், ஆனால் தமது சித்தத்திற்கு எதிராகக் கலகம் விளைவிப்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்றார் (உபா. 5:9, 10). அவரது தயவும் கண்டிப்பும் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் காணப்படுகின்றன. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில், தாவீதிற்குத்தேவனுடைய தயவு பற்றிக் காணப்படும் பகுதியில் தேவன் இரக்கம் உள்ளவர் என்று வெளிப்படுகின்றார். தாவீது பத்சேபாளுடன் செய்த பாவத்திற்காகவும் உரியாவைக் கொலை செய்ததற் காகவும், நியாயப்பிரமாணத்தின்படி, கொல்லப்பட்டிருக்க வேண்டும் (லேவி. 20:10; எண். 35:30). இருப்பினும் தேவன் அவருக்கு இரக்கம் காண்பித்து அவரது பாவத்தை மன்னித்தார், ஏனென்றால் அவர் தேவன்மீது அன்புகூர்ந்தார் மற்றும் தேவன் அவர்மீது அன்புகூர்ந்தார் (2 சாமு. 12:13). தேவன் தமக்கு எதிராகக் கலகம் செய்த, நோவாவின் காலத்தில் இருந்த உலகம் (2 பேது. 2:5) போன்ற மற்றவர்களைத் தண்டியாது விடவில்லை. தேவனுடைய கண்டிப்பு, அக்கினியால் நாதாப் அபியு ஆகியோர் மரித்ததி லும் (லேவி. 10:1-3), பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள மற்ற நிகழ்ச்சிகளிலும் காணப்படமுடியும்.*

*தேவனுடைய தயவு, புதிய ஏற்பாட்டில் பேதுருவுடன் (லூக். 22:31, 32), பவுலுடன் (1 தீமோ. 1:15, 16) மற்றும் பிறருடன், அவரது செயல்முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவரது கோபாக்கினை அனனியா மற்றும் சப்பீராள் (அப். 5:1-10), மற்றும் ஏரோது (அப். 12:20-23) ஆகியோரின் மரணத்தில் காணப்படுகிறது. இந்த மக்களின் தவறான செய்கைக்காக இவர்கள் சாகும்படி தேவன் அடித்தார்.*

*கீழ்ப்படியாதவர்களிடத்தில் தேவன் செயல்படும் விதங்கள், அவர் கடுமையான தண்டனையைத் தரக்கூடியவராய் இருக்கின்றார் என்பதைக் காண்பிக்கின்றன. தேவனை அன்பின் தேவனாக மாத்திரம் காணுகின்றவர் கள், பாவத்திடம் அவர் கொண்டுள்ள வெம்மையான மகிழ்வற்ற தன்மை யையும் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு அவர் தண்டனை அளிப்பதையும் காணத்தவறுகின்றனர்.*

## தேவனுடைய கண்ணோக்கு

தேவன் நித்தியத்திற்கும் நீதிமான்களுக்கு வெகுமதியளித்து, அநீதியான வர்களுக்குத் தண்டனையளித்துக் கொண்டிருப்பாரா? "என்றென்றைக்கும்" என்பது வெகுமதியின் கால அளவை மாத்திரம் குறிப்பிடுவதாயிருந்து தண்டனையின் கால அளவைக் குறிப்பிடாததாக உள்ளதா? (மத். 25:46ஐக் காணவும்.) நித்திய தண்டனை என்பது வேதாகம போதனையாயிராமல் சபையின் பாரம்பரியக் கருத்தாக மட்டும் உள்ளதா? மனிதரின் வெகுமதி அல்லது தண்டனையின் கால அளவைப் பற்றி அறிந்து கொள்வதற்கு, தேவனுடைய வெளிப்படுத்துதலில் உற்றுநோக்கி அவர் அதைப் பற்றி என்ன கூறியுள்ளார் என்பதை அறிந்துகொள்ளுதல் என்பதுதான் நமக்கு மிகச்சிறந்த வழியாக உள்ளது. தேவன் போதிப்பது எதுவாக இருப்பினும் அது சரியானதாகவே இருக்கும்.

மூலமொழியின் அடிப்படையில் நாம், வெகுமதி அல்லது தண்டனை யின் கால அளவைப் பற்றி வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ள வகையில் சுலபமாகத் தீர்மானிக்க முடியும்.

*Olam* என்ற எபிரெய வார்த்தை "ஒருக்காலும் முடிவுறாத" என்று அர்த்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் இது "நீடித்துள்ளது," "காலத்திற்குத் தாக்குப்பிடிக்கக் கூடியது," அல்லது "தொடர்ந்து இருப்பது" என்று சாதாரணமாக அர்த்தப்படுகிறது.[2] வரையறைக்குட்பட்ட கால அளவு அல்லது நித்தியம் முழுமைக்கும் இருக்கக் கூடியதைப் பற்றி ஏதேனும் கூறப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு, சந்தர்ப்பப் பொருள் அல்லது மற்ற வேத வசனங்கள் அவசியமாகின்றன. வெகுமதி அல்லது தண்டனையைக் குறிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் தானியேல் 12:2 என்ற ஒரே ஒரு வசனத்தில் மாத்திரமே *olam* என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது: "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்." இந்த வசனம் "காலத்தால் சுற்றிச்சூழப்பட்டது" என்று விளக்கம் அளிக்கப்படக்கூடும்; இருப்பினும், இவர்கள் என்றென்றைக்கும் இருப்பார்கள் என்று புதிய ஏற்பாடு போதிக்குமானால், இவ்வசனப்பகுதி யும் இதேபோன்று தான் விளக்கியுரைக்கப்பட வேண்டும்.

*Aion*[3] என்ற கிரேக்க வார்த்தைக்கு முன்னதாக, "காலத்திற்குள்" என்று அர்த்தப்படுகிற *eis* என்ற வார்த்தை வந்தால் தவிர, [*Aion* என்ற] அந்த வார்த்தை, "காலம்" அதாவது ஒரு காலவேளை என்று நினைக்கப்பட வேண்டும் (மத். 28:20). இது நடைபெறும்போது, இது "என்றென்றைக்கும்" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும் (மத். 6:13; 21:19 [KJV]; லூக். 1:33, 55). திரும்பத் திரும்பக் கூறப்படும்போது (*eis tous aionas tov aionas*; நேர்ப் பொருளில் "காலங்களின் காலங்களுக்குள்"), இது "என்றென்றைக்கும்" (பிலி. 4:20), "சதாகாலங்களிலும்" (1 தீமோ. 1:17) என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். *Aionios* என்ற வார்த்தையானது எப்போதுமே, என்றென்றைக்குமான அல்லது நித்தியமானதைக் குறிக்கிறது, மற்றும் இது இவ்வாறே பெரும்பாலான பதிப்புகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது (மத். 18:8; 19:16, 29).[4]

பின்வரும் வசனங்களில், *aion* என்ற வார்த்தைக்கு முன் *eis* என்ற வார்த்தை வருகிறது, இது "என்றென்றைக்கும்," அதாவது நேர்ப்பொருளில் "காலத்திற்குள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் இது நமது எதிர்கால வெகுமதி அல்லது தண்டனை என்பதைக் குறிப்பதாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது:

> இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் (யோவா. 6:51; 6:58ஐக் காணவும்).
>
> ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென் றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை (யோவா. 8:51, 52).
>
> அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை (யோவா. 10:28).
>
> உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக் கும் மரியாமலும் இருப்பான் (யோவா. 11:26).
>
> தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1 யோவா. 2:17).
>
> இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது (யூதா 13). (தொடக்க காலக் கையெழுத்துப் பிரதிகளில், Aion என்பது யூதா 13க்கு இணை வசனமான 2 பேது. 2:17ல் காணப்படுவதில்லை.)

குறிப்பிட்ட சில வசனங்களில் *aion* என்பதற்கு முன்பாக *eis* என்ற சொல் வருவது என்பது மீண்டும் மீண்டும் செய்யப்படுவதாக உள்ளது, ஆகையால் இது, எதிர்கால வெகுமதி அல்லது தண்டனையைக் குறிக்கும் வகையில், "என்றென்றைக்கும்" அல்லது "சதா காலங்களிலும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:

> அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது (வெளி. 14:11).
>
> அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளி. 20:10).
>
> அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் (வெளி. 22:5).

*Aionios* என்பது பின்வரும் வசனங்களில் எதிர்கால வெகுமதி அல்லது தண்டனையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் இது "நித்தியமான" அல்லது "என்றென்றைக்கும்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது:

*நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் (மத். 18:8).*

*என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, ... விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் (மத். 19:29; மாற். 10:30; லூக். 18:30ஐக் காணவும்).*

*அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி யிலே போங்கள் (மத். 25:41).*

*அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான் களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் (மத். 25:46).*

*மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (2 கொரி. 4:17).*

*தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லதா நித்திய வீடு பரலோகத் திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கின்றோம் (2 கொரி. 5:1).*

*நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெச. 1:10).*

*தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி (2 தீமோ. 2:10; 1 பேது. 5:10ஐக் காணவும்).*

*இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக் குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் (2 பேது. 1:11).*

நாம் பின்வரும் சொற்றொடர்களையும் வாசிக்கின்றோம்: “நித்திய நியாயத்தீர்ப்பு” (எபி. 6:2), “நித்திய மீட்பு” (எபி. 9:12), மற்றும் “நித்திய சுதந்தரம்” (எபி. 9:15).[5]

மேற்கண்ட வசனப்பகுதிகளைக் கவனமாகப் பரிசீலனை செய்த லானது, நீதிமான்களுக்கு வெகுமதியளிக்க நடைமுறைப்படுத்தப்படும் அதே காலவேளையானது அநீதியுள்ளவர்களுக்கு தண்டனையைக் குறிக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. நீதிமான்களுக்கு என்றென்றைக் கும் வெகுமதியளிக்கப்படும் என்றால், துன்மார்க்கரும் என்றென்றைக்கும் தண்டிக்கப்படுவார்கள். தேவன், தம்முடன் நீதிமான்கள் என்றென்றைக்கும் இருப்பார்கள் என்று வாக்குத்தத்தம் செய்துள்ளதுபோலவே, அநீதியுள்ளவர்

கள் என்றென்றைக்கும் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் அவர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

பிசாசும் அவன் தூதர்களும் பெறுகின்ற அதே தண்டனையை துன்மார்க்கரும் பெறுவார்கள் (மத். 25:41). வெளி. 20:10, கள்ளத் தீர்க்கதரிசியுடனும் மிருகத்துடனும் பிசாசானவன், "இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவான்" என்று கூறுகிறது. இவ்வசனமானது, வாதை என்றென்றைக்கும் இருக்குமென்று மாத்திரம் சுட்டிக்காண்பித்தது என்றால், அது தண்டனையின் கால வேளையைச் சுட்டிக்காண்பிப்பதற்குப் போதுமானதாக இருக்கும்; ஆனால் (வெளி. 22:5ன்-படி இரவும் பகலும் இனி இராது என்றிருப்பினும்) "இரவும் பகலும்" என்பதைக் கூடுதலாகக் கூறுதலானது, தண்டனையானது தொடர்ந்து இருக்கும் மற்றும் அது என்றென்றைக்குமான தண்டனையாக இருக்கும் என்பதை வலியுறுத்துகிறது.

சிலர், யூதா எழுதிய நிருபமானது, ''நித்திய அக்கினி'' என்பதன் உதாரணமாக சோதோம் கொமோரா பட்டணங்களின் அழிவைக் கொடுத் திருப்பதால், "நித்திய அக்கினி" என்ற சொல்விளக்கம் நிர்மூலமாகுதலை அர்த்தப்படுத்துகிறது என்று முடிவு செய்துள்ளனர். இந்தச் சொற்றொடர் அக்கினி இருப்பதன் காலவேளைக்குப் பதிலாக அதன் விளைவுகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இவர்கள் நம்புகின்றனர். சோதோம் கொமோரா பட்டணங்களின் அழிவு (ஆதி. 19:27-29) நித்தியமானதல்ல என்பதே இந்த முடிவின் பிரச்சனையாக உள்ளது. இயேசு, "நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று உரைத்தார் (மத். 10:15). சோதோம் கொமோராவின் குடிகள் நியாயத்தீர்ப்பு நாளில் இயேசுவின் முன் தோன்றுவார்கள் என்றால், ''நித்திய அக்கினி'' அவர்களை நிர்மூலமாக்கவில்லை, ஆனால் அவர்களுக்கு அழிவை மாத்திரம் கொண்டு வந்தது. அடுத்த பாடத்தில் நாம், துன்மார்க்கருக்கு தரப்படும் தண்டனை யின் இயல்பை ஆழ்ந்து சிந்திப்பதுடன், "destroy" மற்றும் "destruction" என்ற வார்த்தைகளின் மூலம் அர்த்தப்படுத்துப்படுவது என்ன என்பதையும் ஆராய்வோம். சோதோம் கொமோராவை அழித்த நித்திய அக்கினியானது பின்வரும் இரு வகைகளில் ஒரு உதாரணமாக உள்ளது: (1) இது தேவன் துன்மார்க்கரைத் தண்டிப்பார் என்று காண்பிக்கிறது, மற்றும் (2) இது தேவன் கொடுக்கவிருக்கும் தண்டனையின் தீவிரத்தன்மையைச் சுட்டிக் காண்பிக்கிறது.[6]

## முடிவுரை

தேவன் அவருக்குக் கீழ்ப்படியாதவர்களை என்றென்றைக்கும் தண்டிப்பார் என்ற சிந்தனை மிகவும் பயங்கரமாக இருக்கிறது, ஆனால் இந்தப் போதனை அவருடைய வசனத்தில் இருக்கிறது. அநீதியுள்ளவர் களுக்கான தண்டனையானது, நீதிமான்களுக்குக் கிடைக்கும்

*ஆசீர்வாதத்தைப் போலவே நித்தியமானதாக உள்ளது. இது நிச்சயமாகவே, நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தேவனைப் பிரியப்படுத்துவதை நாடச் செய்ய வேண்டும். நாம் அவருடன் நித்தியத்திற்கும் பரலோகத்தில் இருப்பதை ஆதாயப்படுத்தி, பிசாசுடனும் அவனது தூதர்களுடனும் என்றென்றைக்குமுள்ள அக்கினியில் கிடப்பதைத் தவிர்த்தால், ஒவ்வொரு முயற்சியும், ஒவ்வொரு கடின உழைப்பும், ஊழியத்தின் ஒவ்வொரு நிமிடமும் தகுதிவாய்ந்ததாக இருக்கும்.*

---

*குறிப்புகள்*

*[1]ரோமர் 1:18; 2:8; 3:5; 12:19; எபே. 5:6; கொலோ. 3:6; 2 தெச. 1:8. [2]"வானங்கள் மற்றும் பூமியின் முடிவு" என்ற பாடத்தில் Olam என்ற வார்த்தை பற்றிய கலந்துரையாடலைக் காணவும். [3]Aion என்பது* KJV *வேதாகமத்தின் சில இடங்களில் "உலகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத். 12:32; 13:22), ஆனால் இது மிக சமீபத்திய பதிப்புகளில் "காலம்" என்றே உள்ளது. [4]*KJV *வேதாகமம், aion என்ற வார்த்தைக்கு, "காலம்" என்பதற்குப் பதில் "உலகம்" என்பதைப் பயன்படுத்துகிறது, இது சிலரை இதனுடன் "உலகம்" என்று அர்த்தப்படும் kosmos என்ற வார்த்தையை நினைத்துக் குழப்பம் அடையச் செய்யக் கூடும். [5]"என்றென்றைக்கும் உள்ள வாழ்வு" என்பது பற்றிய கலந்துரையாடல் ஒன்றை "நீதிமான்களுக்கு வெகுமதி" என்ற பாடத்தில் காணவும். [6]இந்தப் பாடத்தில் "என்றென்றைக்கும் உள்ள வாழ்வு" என்பது பற்றிக் கொஞ்சம் மாத்திரம் கலந்துரையாடப்பட்டிருத்தல் வினோதமானதாகக் காணப்படலாம்; இருப்பினும், இந்தச் சொல்விளக்கம், அளவையைப் போன்றே தரத்தைப் பற்றியும் அதிகம் குறிப்பிடுவதாக உள்ளது. ஆகையால், அந்தக் கலந்துரை யாடல் பிற்பாடு "நீதிமான்களுக்கு வெகுமதி" என்ற பாடத்தில் இடம் பெறுவதற் காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.*